ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமஹாபாரதம்

சுபத்திரை கல்யாண நாடகம்.

இவை

செய்யார் தாலூக்கா ஆக்கூர் கிருமம்

மூத்துராஜகுல. பெத்து நாயுடு குமாரன்

கவிராயர்

கிருஷ்ணசாமி நாயுடு

அவர்கள் நூதன வர்னமெட்டுகளால்

இயற்றியதை

ஷை ஆக்கூர் கிருமம் ஆதிசைவம்.

பாரதம், இராமயணப் பிரசங்கம் கவிருஜர்

அப்பாசாமி குருக்கள் அவர்களால்

பரிசோதிக்கலுற்று.

K. S. முருகேச நாயகரவர்களால்

தமது யூனைட்டெட் பிரிண்டிங் ஒர்க்ஸ்

அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது.

காஞ்சீபுரம்.

Registered Copy Right.

1918.

[*Price Rs.* 0—4—0]

23 APR 1919

உ

ஸ்ரீராமஜெயம்.

செய்யார் தாலூக்கா ஆக்கூர் கிருமம்

ஆதிசைவ அப்பாசாமி குருக்கள் குமாரர்

பாரதக் கவிஞ்சர்

சுப்பிரமணிய குருக்கள் அவர்களால் இயற்றிய

சாற்று கவி.

மங்கலமாட மோங்கும் மாநகர் ஆகுவின்கண்
திங்களைவெளிறு செய்யும் தீதிலா சுபத்திரைத்தன்
பொங்கமாம் கடிமணத்தைப் புவியிர் நாடகமாய்தானே
எங்குளரு மெளிதிற்காண இயற்றினன் கிருஷ்ணதாசன்.

அவையடக்கம் விருத்தம்.

எங்குமே சாக்ஷியாகி இருதயத்தொளியாய் நல்ல
பங்கயத்தாளினுளே பச்சை மேனியளரயோங்கும் [ணம்
அங்கம்மாள் அருளால் ஆக்கூர் அமர் கிருஷ்ணதாசன்ஞா
பொங்குமாகவிஞ்சர்பாதம் போற்றிநாடகம்செய்தனனே

உ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ மகாபாரதம்,

சுபத்திரை கல்யாண நாடகம்.

வெண்பா.

சீர்பெருகும் வடமதுரைச் சேல்விழியாள் சுபத்திரையின்
பேர்பெருகத் திருமணமும் பேசவே—பாரதனில்
நித்தியமா யெவ்விடத்தும் நிறைஞ்சனமா மண்ணலெனும்
அத்திமுகா புத்தியருள் தா.

சர்வ தேவஸ்துதி தரு தோடி-ராகம்-ஏக-தாளம்.

ஹரிஓம் ஹரிஓம் அண்ணல் ஆனைமுகன் அருமுகன்
அம்பிகைப்பொன்னம்பலவன் அடிகள் துணையே
ஆஞ்சநேயா அய்யனே தேவா அடியார் நடித்திட துணை
யே வா வா
அந்தரி சுந்தரி நிரந்தரியே வெண்டா மறையாள் அருள்வாக்
களிக்க வா வா ஹரி
அன்னை நல்லம்மாள் அரசேவருவாய் அடிமைகள் பிணி தீர
வரமே தருவாய்
ஆதிமயஞானம் புகல் நீதிபுங்கவர் அங்காளி அன்னைவருவாய்
அம்மணி பஞ்சவரொளியேவருவாய் அகிலத்திலிந்த தமிழ்
வளரவே செய்வாய்
ஆசையுட னனைப்போற்ற இடர்வாராமற் காக்கவே ஆச்சி
வருவாய் ஹரி

எடர்களுலவும் ஆக்கூர் நகரில் அமர்ந்திடும் கிராம
தேவதா வாராய்
அன்பன் கிருஷ்ணசாமி தொழுதிடு ஞானமணி யெனும்
அமுதே வருவாய். ஹரி.

பலராமர் விருத்தம்.

சீர்பெருகுநவ மணிகள்கிரீடம்பூண்டு சிற்றரசர்ப் போற்றிமிகப் பணிய ஆதி, கார்முகிலோனென்னு மாநாமம் பூண்டோன் கலப்பையுடன் செங்கோலும் கரத்திற்றுங்கி, தார்புனைக்ததிருமார்பன் மதுரைநாட்டை தாழ்வில்லா தரசளிக்க வமைச்சர்சூழ பார்தனிலே யுள்ளவர்கள் புகழும் சீலன் பலராமர் பொற்சபைக்கு வரக்காண்பீரே.

பலராமர் தரு மோகனம்-ராகம்-ஆதி-தாளம்.

ராஜராஜனுன ராஜன் வடமதுராபுரி ராஜாதி ராஜன் வந்தான்
வெகு பலராம ராஜ கெம்பீரன் வந்தான் ரா

சரணம்.

தேசத்துளமன்ன வர்ராண்டு திறையளிக்க
தினகரன் போல் மகுடம் திருசிரத்திற் சொலிக்கத்
திருவுளமாதர் நடிக்கத்தேர்ந்த கவிஞசர் படிக்கத்
தீதிலா வடமதுராபுரியாள் மாரன்
தேவர் களாயினும் ஜெயித்திடுமதி சூரன். ரா.

பலராமர் விருத்தம்.

ஆணிப்பொன் வைகுண்டத்தி லாதியாய் அமர்ந்துப் பின்னும்
வேணியன் அயன்மாலாகி வித்தாகி மறையினுலும்
காணிடா,வடிவாயெங்கும் கலந்துமென் னுளத்திலோங்கும்
மாணிக்க அண்ணல்தாளை மனத்தினுட் துதிசெய்வேனே.

தேசவிசாரணை தருவு ராகம்-சங்கராபரணம் ஏக-தாளம் சாப்பு.

பலராமர்—சீர்கொண்ட தேவதா பூஜைகள் காலம்போல்
சீராலயங் தவராமலே
சீலரால் நடந்தேருதாசொல்லுவீர்செல்வமிகு மந்திரி
மார்களே
மந்திரி—சீர்கொண்ட தேவதாபூஜைகள் காலம் போல்
சீராலயங் தவராமலே

சிறப்பாய் நடந்தேருது மறைபோல் சித்
போன்றவர் காணுவீர்

வேறு தருவு திருப்புகழ்.

பலராமர்—தண்பெருஞ் சோலைகள் வாவிகளோங்கிய வின்
னகர் திங்களில்
திண்புயா மாரியு மூவிசை மண்டல மாக சொரிவது
மிகவுண்டா.

மந்திரி—வீசும் பொற்றுளியோ மாதமு மூவிசைசொரிந்
திட பலனெற் பசுமுன் குலமுந்தழைத்துபின் சுகமே
அடையுரார் குடிகள் மிக க்ஷேமம்.

பலரார்மர் தருவு-ராகம்-தன்யாசி-ஏக-தாளம்.

பேரிகை முழங்குவது என்னவிந்தை பேரிகை முழங்குவது

சரணம்.

பேரிகை வெகுவித வொலியுமாய் கேழக்குது
பேதகம் செய்பவரோ காண்கிலேன் தலைவினில் பேரி

மறையவர் வேதகோஷ்ட்ட மாகுது ஆங்கனே
மாசறு மந்திரிகாள் மதித்திடவும் போகா. பேரி.

கொடி குடை காணுது குவலயம் அதிருது
கேர்திலா ரதம் வரும் வேகம் போல் காணுது பேரி

பலராமர் விருத்தம்.

வருபவர் எவரோகாணேன் வல்லபமிகுந்த நல்ல
குருகுல அரசரோதான் கூரிடும் பகைஞரோ
பெரியமா சேனைசெல்லும் வாருபோல் காணுதாங்கு
அறைகுவீர் ஆய்ந்துயிப்போ அமைச்சரே எனக்குதானே.

பலராமர் வசனம்.—மந்திரி இவ்வாரு பேரிகையோடு வேதகோஷ்ட்டமும் கேழ்ப்பதால்.அப்படி வருபவர்எவர்களா யிருக்கலாம் தெரிவிப்பீர்கள்.

மந்திரி வசனம்.—பிரபு அப்படி கேழ்ப்பது மங்கள வொலியாக இருப்பதால் யாரோ அரசர்கள்சுபவிஷயமாக இங்கனம் வருவதுபோலக் காணப்படுகிறது, கவனிக்கின்றோம்.

விதுரன் விருத்தம்.

இந்தவிதம் திருதராட்டிரனுற் சொன்ன ஏவலால்மணமுடிக்க பெரியோர்சூழ, அந்தமிகு ரதிபோன்ற சுபத்திரையைக் கோரி ஆடம்பர மங்கள வாத்தியங்களோங்க, சுந்திரமாயலங்கரித்த இரதத்திலேரி சூரராம் நான்குபடை நெறிங்கிபோற்ற, கந்தமலர் மார்பணிந்த விதுரராஜன் காதலாய் வடமதுரைவரக் காண்பீரே.

விதுர ராஜன் தருவு ராகம்-தோடி-தாளம்-ரூபக-சாப்பு.

சத்திய விதுரராஜன் வந்தனனே மதுரைனுடி சத்
சத்திய விதுரராஜன் வந்தான் சாக்ஷியாகவே எங்குமாய் நிறை
நித்திய அண்ணலைஇருதயமதில் நிதமும்துதிசெயும்சாதுவாகிய
எத்திசையும் புகழ்பெற்ற அதிசூரன் கண்ணன் மகனு
மிலகு மாரன் போல் அழகன் அதிதீரன்
இத்தலம் புகழ் வெற்றி வில்லினன்
எதிகள் போலவே சாந்த சொல்லினன்
சுத்த வீரர்கள் போற்றும் நல்லவன்
ஜோதிமணி முடிபூண்ட வல்லவன் சத்

வசனம்.—ஐன்பராகிய பெரியோர்களே மந்திரி மார்களே எனது அண்ணன் திருதராட்டிர மஹாராஜன் சொல்லைப்போல் சுபத்திரையைக் கோரி நாம் வடமதுரை எல்லையிலும் அதிக தூரம் வந்துவிட்டோம் இந்த துற்சகுனத்தை பாருங்கள்.

விதுரன் தருவு ராகம்-காம்போதி-ஏக-தாளம்.,

இதுவென்ன விதிவசமோ ஆ ஆ இந்த சகுனம் பாரீரையா இது
பொதுவோ நன்றோதீதோ புத்தியுள்ளவரே
போக வொண்ணுதீர் திரும்பும் நகர்நேரே இது
பாம்பு குருக்காகுது அதோபஞ்சப்பக்ஷிகளில் ஆந்தையும்
சீறுதுபார்
தீம்பு எதுவோ நீர் திரும்பும் என்சொல் நம்பும் தெளிந்த
வானமு மிடிக்குதே வம்பு இது
ஓனரிகுருக்காகுது இதோ வொற்றை பார்ப்பான் வாரான் ஒ
நாரிபாகன் செயல் எதுவோ அரியேன் நாட்டிலென்ன தீதோ
எதுவும் குரியேன் இது

விதுரராஜன் வசனம்—பெரியோர்களே மந்திரிமார்கள இங்கு சகுனம் தடையாவதால் நாம் திரும்பி அஸ்தினபுர போய்விடலாமா தெரிவிப்பீர்கள்.

மந்திரி வசனம்.—காடுகளில் சகுனம் பார்ப்பது சாஸ்திர விரோதம் இதுகளினால் குற்றம் வாராது அரசே பலராமர் சபைக்கு நாம் போகலாம் வாரும்.

விதுரர் தரு இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

போகலாம் வருவீர் மந்திரிகாள் நாமுமே
புகழுவடமா மதுரை மன்னன் பால் போ
ஆகம வேதமும் கற்றுணர் நண்பரே
ஆதியாம் அண்ணலின் துணையால் இத்ததி போ

பலராமர் விருத்தம்.

எந்தனைபொருட்டா யெண்ணி எதற்காக இங்குவந்தீர்
இந்தபொற்பீடம் தன்னில் எழுந்தருளீ யாநல்ல
கந்தமாமலரைப் பூண்டோய் காவலா ஆங்குதானே
சுந்தீரா இருப்போரெல்லாம் சுகந்தானு அரிவிப்பீரே.

வசனம்.—விதுர மஹாராஜனே இந்த சிம்மாசனத்தில்எழுந்தருளும் அஸ்தினபுரத்திலுள்ள யாவரும் க்ஷேமமா தெரிவிப்பீர்.

விதுரன் தருவு ராகம்-தன்யாசி-தாளம்-ஆதி.

யாவரும் சுகக்ஷேமந்தான் மன்னு அந்த
அஸ்தினபுரத்திலுள்ள வீஷ்மர் திருதராட்டிரர் யா
காவலனே கனமுள சுன்னனோடு துரியனும்
காந்தார கோன சகுனியும் மற்றவரசர் அவரின்
தேவிமாரும் சுதர்களும் தீர வீர சூரர்களும்
தீதிலா அஸ்வத்தாமரும் துரோணரோடு கிருபரும் யா.

விதுரன் விருத்தம்.

அன்பனே பலராமாகேள் அருங்கிளி யுமதுதங்கை
கன்னியாம்சுபத்திரை தன்னை காவலன் துரியனுக்கு
இன்பமாய் மணம்செய்விக்க எண்ணினார் எனது அண்ணன்
நன்மையாம் ஈந்தாயாகில் நாடுளோர் புகழ்வர்தாமே.

வசனம்.—பலராமரே உமது தங்கை சுபத்திரையை என் குமாரன் திரியோதனனுக்காக கோரிவந்தது தருகுரீரா என் அண்ணன் திருதராட்டிரர் சொற்படி வந்தேன் தெரிவிப்பீர்.

பலராமர் வசனம்.—விதுர மஹாராஜனே வெகு சந்தோஷம்தான் தாம்பூலம் கொடுத்து நீர் அத்தினபுரம் சென்று முகூர்த்தப்பத்திரிக்கை அனுப்பவும்.

விதுரன் தரு ராகம்-கன்னடாதோடி-தாளம்-ரூபக சாப்பு.

தாம்பூலம் தருகின்றேனன் பெற்றுக் கொள்ளுவீர்
தார்புனை சூயோதனனுக்கும் சுபத்திரை தனக்கும் இத்தினம்

சரணம்.

சாம்பவி சுதன்முதல் தேவர்கள்காண பொன் உம்பெண்ணனதே
சாஸ்திரம் போலவே மாமலர்கனிவகை ஆடையுடம் கந்தமிதோ
நாம்தரும்மணிபணி கோடியாம் பொன்இது நாகமாபதக்கமுடி
நல்லமா சாமான் ஆரமுமுத்துமாலையும் ரவை கோடி தா

விதுரன் வசனம்—பலராமரே அவ்வாரே முகூர்த்தப்பத்திரிகை அனுப்பு கின்றேன் போய்வருகின்றேன்.

அர்ச்சுனன் விருத்தம்.

இந்திரப்பிரஸ்தம் தன்னில் இருந்திடும்போது ஐவர்
அந்தரங்கத்தில் தருமர் அன்னைபாஞ்சாலி யோடு
விந்தையாய் இருக்கக்கண்ட விஜயனும் பாபம்தீர
சந்திர னொளிவைப்போல சன்யாசியாக வாரான்.

வசனம்.—எப்படி யென்னில் இந்திரபிரஸ்தத்தில் இருந்து சன்னியாசி வேடமாய் தென்மதுராபுரியில் சித்திராங்கதையை மணம் புரிந்த அர்ச்சுனமகாராஜன் சிலதப சிரேஸ்டர்களோடு யாத்திரையாக கோகர்ன மார்க்கம் வருவதறிவீர்கள்.

தருவு-ராகம்-மோகனம்-தாளம்-ரூபக-சாப்பு.

சந்திர குலதிலகன் சன்யாசியான வர்ச்சுனன்
சுந்தரத்தில் மாரன் சூரவீரதீரன் வாருனிதோ சந்

வெண்பொடிப்பூ சியே நல்ல வேதாக மங்கள் பேசியே
விண்ணின் மணிபோல வீணை வல்லோனுலே வாருனிதோ

வீரன் யோகதண்டணிந்து விமலன் தாளைப்பணிந்து
ஆரவாரமாக அந்தணர் வருக வாருனிதோ சந்
கண்ணன் தனைப்போற்றியவன் காண்டீபமதைத்தாங்கியே
விண்ணவர்கோன் பாலன் வீரமுளதீரன் வாருளிதோ சந்.

அர்ச்சுனன் தேவாரப்பண்.

சாக்ஷியும் நீ சூக்ஷியும் நீ சமயமும் நீ தனிமுதல்
மாக்ஷிமை என்முடியில் விளையாடுவன் நீ கண்பாராய்
அண்டமும் நீ பிண்டமும் நீ ஐம்பூதமான வன் நீ
தொண்டருக்கு தொண்டனும் நீ துரியவடிவானவன் நீ
உள்ளொளி நீ எவ்வுருவமும் நீ உலகமுதல் சர்வமும் நீ
தெள்ளுமறைப் பொருளதும் நீ தேவியுமைப்பாகனும் நீ
அரியபர மானவன் நீ ஆனந்தத்தேனும் நீ
சரியைமுதல் ஞானம்வரை சமரசமாம் பொருளும். நீ

அர்ச்சுனன் தருவு-ராகம்-கம்போதி-ரூபகம்-தாளம்.

சிவ சிவ சிவமே சம்போ ஜெகம் படைத்தவனே
சிவமே என்னுளம் எங்கும் நிறைந்தோனே சிவ
தவமுனிவர் தொழும் நல்லத் தாணுவே நின் அடியேன்
பவமே ஏகிட கங்கையில் மூழ்கியே பணிந்தேன்
புண்ணியனே சிவ
தென்மதுரைவாழ் சொக்க நாதன் திருத்தாளைப்
பணிந்தேன்
அன்னை மீனாக்ஷியின் சேவையுமே கண்டேன் அர
கரா அரனே சிவ.

அர்ச்சுனன் விருத்தம்.

என்னோடு யாத்திரை செய்யும் இருபிறப்பாளரே கேள்
தன்னிகரிலா கோகன்னத் தாணுவைத்தொழுதோமின்று
சொன்னவோர் ஆண்டும் ஆச்சுசுகுணரேயாத்திரைபோவீர்
இன்னில மீதிலந்த இரைவதத்தடி செல்வேனே.

வசனம்.—யாத்திரை வாசிகளே வந்தனம் என்னுடைய யாத்திரை முடிந்துவிட்டது. இனிநான் வடமதுரைக்குசெல்ல வேண்டும் இனியுங்கள் யாத்திரையை முடித்து செல்லுவீர்கள்

வசனம்.—சரி நானே வடமதுரையை நாடி இரைவதச்சாரனுக்குவந்து விட்டேன் இங்கனம்மழைபெய்யுரது இந்த ஆலா விருக்ஷத்தின் பாலிருந்து நாளயதினம் மதுரைக்கு செல்லுகின்

ா. இனிநாம் யர்த்திரைசன்யாசி வேடத்தைநீக்கி திருத்தன் சன்யாசியாக வேடம்பூண்டால் தான்சுபத்திரையை மணம் புரியலாம் அவ்வாரே வேடம் பூணுகிரேன்.

அர்ச்சுனன் விருத்தம்.

இந்தவிதம் மாயவந்தன் அருளினலே எழிலான கிரிபாலே ஆலின்கீழே, விந்தையாய் வெண் பொடியை மெய்யறப்பூசி வேதாந்த முடிவதனைக் கண்டோன் போலும், இந்தபாருள்ள வர்கள் பரனென்ரேற்ற ஈசன் அயன்மால் யெனவே வருவதாகி அந்தமாதிருக் கோலும் கரத்திற்ருங்கி அஞ்ஞானம் கடந்தவன் போல் கிரீடி வாரான்.

அர்ச்சுனன் தருவு கேத்து.

கோபாலா அரி கி கோபாலா அரி கி கோபாலா கோ
பாலா கோபாலா துணைவா.
ஆபத் பாந்தவா அரேவாசுதேவா காவா அய்யனே
எங்கனம் நிறைந்தோனே வாவா கோ
விடலே அரி கி விடலே விடலே விடலே வேத நாதா
தாதா கோ
கடலமிது சர்ப்பசயனு காரனு காகுந்தா
மாதவா கேசவா ராகவா கோ

அர்ச்சுனன் வசனம்.—எ கண்ணு சுபத்திரையை நினைக்க நினைக்க என்மனம் வோர்வாராய் வருகிரது யென் செய்வேன்

அர்க்சுனன் தரு காம்போதி-ராகம். ரூபக-தாளம்.
மன்மதா அடா மன்மதா உந்தன் மதம் அழியாதடா.
துஷ்ட்ட ம
அன்னநடை சுபத்திரைபால் செல்லுவேன் அக்கால்
வெல்லுவேன் ஆங்குகாணடா எந்தன் திறத்தை ம
கண்ணன் மகனுனும் நீ கேளடா காலமல்லடா
நாளைகாணடா எந்தன் திறத்தை ம
பஞ்சபாணம் தொடுக்காதே நஞ்சுரேன் பின்னும்
கெஞ்சுரேன் பின்பு காணடா எந்தன் திரத்தை ம

அர்ச்சுனன் விருத்தம்

மன்மதன் பஞ்சபாணத்தையேவி மன்றுடுறுனே பின்னும்[மனே
என்செய்வேன்சந்திரன் இந்தமாஇரைவில் என்மீது கனல்வீசரா
கன்னலாள் சுபத்திரை தன்னைநான்காண காலமோ உகந்தகு
கண்ணு
என்மனக்குறையை இத்தநிதீர்க்க இறைவனே வந்திடுவாயே.

வசனம்.—ஏகண்ணு கமலக்கண்ணு உமதுதங்கை சுபத்தி
ரையை விவாகம் செய்துக்கொள்ள ஆசைகொண்டேன் நீர்
இங்கனம் வரவேண்டும்.

கிருஷ்ணமூர்த்தி விருத்தம்.

ஆதியாய் நடுவாய் அந்தமாயோங்கியும் ஆழியிற்றுயின்றிடு பவ
னுய், ஜோதியாய் நிறைந்த சுகுணனே பின்னும் சொல்லுமிப்
பாரத சூஸ்திரன், நீதியேவடமா மதுரையில் ஜெனித்த நித்திய
னே அரிகரி முகுந்தன், கோதிலாதவனுய் எங்குமாய் நிறைந்த
கோகுல கிருஷ்ணன் வந்தனனே.

வசனம்.—எப்படி என்னில் சத்தியபாமை ருக்மணி சமே
தராய் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி வருவதை அறிவீர்கள்.

கிருஷ்ணமூர்த்தி தரு-மத்தியமாவதி-ராகம்-அட-தாளம்-சாப்பு.

பாலகிருஷ்ணன் வந்தனன் பாலகிருஷ்ணனும் கோபால
மூலமுதல் அண்டகோளம் படைத்தவன் கோபால
நீலமேகன் நிறைஞ்னனுகியும் நினைத்தவரம்தரும் கோபால
ஆயர்வீட்டில் அரியாதவன்போல் அமிர்தமருந்தும் கோபால,

கிருஷ்ணர் தரு தோடி-ராகம்-ரூபக-தாளம்.

என்னவிந்தை அண்ணன் யோஜனை இல்லத்தில் கண்டேன்ஆ ஆ
ஏதேது நம்மில் ஆகாதது வொன்றுண்டோ இப்போதே நான்
முடிப்பேன்
இன்னில அண்டகோளமும் விழுங்கிய வெந்தனுக்கிது பெரிதா
ஈசனும் நானே அரிஅயன் நானே ஏகனும் நானுனேன்
மன்னவன் துரியன் என்றாலும் நான்மதிப்பனே ஏதேது என்
மாகுணவிஜயன் மணமே செய்திட செய்வேன் என் சூது என்

வசனம்.—ஆ! ஆ! ஆ! நான்சர்வாந்திரி யாமியாக இருப்ப னேயானல் பலராமரை ஏமாற்றி சுபத்திரையை அர்ச்சுனனுக் கே மணம்புரிகுரேன்.

ருக்மணி வசனம்.

நாதா நீர்மாத்திரம் என்னமோகருதி ஆனந்தமாகசிரித்து க்கொள்ளுகுரிரே அது என்ன காரணம் தெரிவிப்பீர்.

கிருஷ்ணர் தரு-ராகம்-மத்தியமாவதி-ரூபக-தாளம்.

ஆருக்மணி எந்தன் அருகேவருவாய் அணங்கேசற்குணி ஆ
பூதலயாத்திரையில் கிரீடி நொந்தனன் அதைப்புகல
ஆச்சர்யம் என்னுளம் களித்தேன் ஆ
வேதவிதிப்படி நடத்துரேன் மணம் தங்கை
வேண்டிடும் படியே முடிக்க எண்ணினேன் ஆ

வசனம்.—கண்மணியானருக்மணிசுபத்திரையைஅர்ச்சுன னுக்கு கொடுக்க வேணுமென்கிறகருத்து எவ்வாராகிலும் முடி த்து விடுகுறேன் உன்கருத்து எப்படி தெரிவிப்பாய்.

ருக்மணி வசனம்.—நாதா வுமது சித்தம் எவ்வாரோ அவ் வாருதான் எனக்கும்.

ருக்மணி சத்தியபாமை வாதுதரு-ராகம்-கல்யாணி-ஏக-தாளம்

சத்தியபா—தேவகிசுதன மதனுதினமு மிப்படி ருக்மணி
யுடனே திருவே பேசுரீர் தேனே நீர்வாரும் தே

ருக்மணி—என்னடி சத்தியபாமை இப்படி ஏளிதம் பேசி
யே இவரை இழுக்குராய் இடஞ்சி நில்லடி ஏண்டி
கைவீசி ஏ

சத்திய—கையினுலெந்தன் நாதனைப்பறிவன் களவுசெய்யா
தேகண்ணனை விடடிகாதகி அடிகாட்டாதே வீரம்கை

ருக்மணி—வீரமாய் கோபால கிருஷ்ணனை இழுத்தாய்
வீண்சண்டைக்காரி நீ அடடிதுர்மாற்கி வித்தைகள்
செல்லாதே விலகி நில்லடி

சத்திய—அன்று பாரிஜாதபூவும் அடியா உன்னிட வீட்
டில் விழுந்திட ஆ ஆ செய்தனே அப்புரம் போடி அ

ருக்மணி—வேலைக்காரி யானதாலே விருக்ஷம் வளர்த்,
வெள்ளாட்டியுன் வித்தைகள்செல்லாதே நான்விட்ட
போடி வெ.

வாது கிருஷ்ணர் தரு-ராகம்-சங்கராபரணம்-ரூபக தாளம்

என்னடி இப்படி சண்டை இடுகுரீர் இத்ததிகைகளை வீசியே
என்னெதிர் மிஞ்சிநீர் பேசியெ என்சொல்லை கேளுங்கள்
கொஞ்சும் கிளிகளே என்

சத்தியபாமை தரு.

வேலைகாரியென்று சொல்லவும் தருமாவிமலா இதனைகேளுமே
ஹிவள்போக்கிரி என்னுளுமே வேண்டியவர் பாலே
பொருளளிப்பவள் வே

ருக்மணி தரு.

பாருமென்று கையை வீசுராளின்னமும் பதட்டமாகவே
பேசியே பங்கய வதனு எசியே பாக்கியனே கேளுநீர்
என்பாலே வாருமே.

கிருஷ்ணர் விருத்தம்.

எங்குமே சாக்ஷியாக இருந்திடும் எனைக்காணுமல்
பொங்கமாயெனது அண்ணன் பூவையாம்சுபத்திரையாளை
அங்கவன் துரியனுக்கு அளிப்பதாய் நிச்சியித்தார்
நங்கைகாள் எனக்குங்கஷ்ட்டம் நன்மையாய் விலகுவீரே

வசனம்.—கண்மணிகாள் நீங்கள் வொருவருக் கொருவர் பொருமையாய் பேசாமல் ஏகோபித்து இருங்கள், நான் அர்ச்சுனனிடம் சென்று வருகிறேன்.

அர்ச்சுனன் தருவு-ராகம்-நாதநாமகிரியை-ஏக-தாளம்.

கோகுல திலகா கோபிகள் மதனு கோரினே னித்தநி
கோவிந்தனே வா வா

மாது சுபத்திரையை மணமே செய்ய மாதவா
உன்னேயன் மலையடி வந்தேன் கோ
வெண்ணெய் பாலுண்டவா விமலனே வாவா
வேதனைப்பயந்தவா யெந்தனைகா வா கோ

வசனம்.—எ கண்ணா இச்சமயம்வரவேண்டும்என் கோரிக்கை நிறைவேற்ற வேண்டும் இந்த ஆலாவிருக்ஷத்திநடியில் இருக்குறேன்.

கிருஷ்ணர் தரு-ராகம்-காம்போதி-தாளம்-ரூபகம்.

வந்ததென்ன காரணம் அர்ச்சுனவந்த தென்னகார
வளமுள சயிலத்திடையே வசனித்தாய் உனக்கென்ன
ஆபத்து வந்
இந்தவேளை யுந்தன் எதிரில் வந்தனன்
என்னமோ காரணம் சொல்லு முன்பிந்தனே
விந்தையா இருக்கு தேனிங்கு வந்தனே
விறைவிற் சொல்லுவை சங்கதி விஜயா என்னுடனித்ததி
சுந்திரா தருமர் பாஞ்சாலியின் க்ஷேமம்
சூரனும் மைத்துனன் பீமன் நகுலன் க்ஷேமம்
நொந்தவன் போல மொழியும் நி க்ஷேமமா
நுட்பமாய் நூல்சொல் சகாதேவனும் யாவரும்
க்ஷேமமா வந்

கிருஷ்ணர் வசனம்.—அர்ச்சுனயேன் சோர்ந்து வோர்வாராய் இருக்கின்றாய் நீ வந்த காரணத்தை சொல்லிவிடுவாய் நான் போகவேண்டும்.

வாது தரு அர்ச்சுனன் ராகம்-எதுகுல--காம்போதி-ரூபக-சாப்பு
சோர்ந்து நிற்கும் காரணத்தை சுந்திரரே அரிவீர் எனை
சோதிக்க லாகுமோ சொல்லுவேன் வோர்வாறாய்
சுத்தனே நானும்
ஆரிடா எண்ணம் கொண்டிங்கே வொரு
ஆசையை நாடிட்டேன்
ஆதரித்திடுவீர் அணங்கனை ஈன்றோய் அமலாவந்திட்டேன்

கிருஷ்ணர் தருவு,

காண்டீபா வுண்மைதனை நீ கலந்துப் பேசாமல்
காணுதவன் போல கெஞ்சுகுராய் நன்றோ
கருத்தென்னமோ நி சொல்
அரசன் துரியன் அவனால் தீதோ

அல்லது பழியாதோ
ஆ ஆ விஜயா சொல்லுவை இத்ததி
அண்டர்களால் சூதோ

அர்ச்சுனன் வசனம்.—சுவாமி உமது தங்கை சுபத்திரை யை எனக்கு தயவுசெய்து விவாகம் செய்து கொடும் அதற்கு தான் வந்தேன்.

கிருஷ்ணர் விருத்தம்.

சொந்தமாம் துரியனுக்கும் சுபத்திரை தனக்கும்காளை
கந்தமா மாலைசூட்டக் கருதினர் பலராமர்தான்
சுந்திரா முடிந்தபின்பு சொல்வது நல்லதாமோ
எந்தனல் உனக்குநாய இனிமேலோ ஆகாதப்பா

வசனம்.—அர்ச்சுனா துரியபூபதிக்கும் சுபத்திரைக்கும் என் அண்ணன் பலராமர் தாம்பூலம் மாத்தி இருக்குறர் அப்படி இருக்க உனக்கு அன்னவளை கொடுக்க என்னால்முடியாது.

அர்ச்சுனர் கிருஷ்ணருக்கும் வாது தரு-ராகம்-காம்போதி

அர்ச்சுனன்—அட-தாளம் தரு.

ஐயனே ஆபத்பாந்தவா அரிகரி திருக்கண்
பார்ப்பீர் அரிகரி திருக்கண் பார்ப்பீர் அடியேன் ஆசையை தீர்ப்பீர்
கிருஷ்ணன்—கார்த்திட நான்தெய்வமாமோ காளை அர்ச்சுனரேகூறு காளை அர்ச்சுனரேகூறு காவலன் சொல்தடுப்பாருறு
அர்ச்சுனன்—தடுக்கவும் மாலாகுமே தானுனீர்அன்றுமலையால் தானுநீர் அன்று மலையால் தடுத்தீர் மழையைக்குடையால்
கிருஷ்—அன்றுனும் விளையாட்டாக அம்மலை ஏந்திேனும்பாரு அம்மலை ஏந்தினேம்பாரு அது இதற்கீடோ கூறு

அர்ச்சுனன் விருத்தம்.

அன்புள்ள மைத்துனகேள் ஆதினள் முதலர்யானே
இன்பமாயுமது தங்கை எழில் சுபத்திரயைனடி [ன்
தென்புடன் மாலைசூட்ட திருமாலே எண்ணங்கொண்டே
இன்னிலம் புகழும்தந்தால் எழில்வண்ணு அருள்செய்வீரே

..ஜுனர் வசனம்.—அர்ச்சுன என்னல் கூடியமட்டில் ..மேரன் நீ இங்கனமே இருப்பாய் நான் நாளையதினம் உன்னை சேவிப்பேன் நி பெரியதபசியைப் போலவே நடி ..ாய் போய் வருகுரேன்.

சுபத்திரை விருத்தம்.

வான்முகில் பழித்தகூந்தல் வளர்பிறை வதனத்தாளே
கானுரை குயிலைவெல்லும் கனத்தமா மொழியினளே
தேனெனும் ரதியையொத்தாள் திருமாலின் தங்கையான
மான்விழி சுபத்திரை நல்லமனத்தினள் வரக்காண்பீரே.

சுபத்திரை தருவு ராகம்-காம்போதி-ஏக-தாளம்

வந்தனள் மணி சதங்கை யணிசுபத்திரை இதோவந்தன
சுந்தர் முகமீதி ஜோதிமணிகள் தோது
சொகுசாக வெகு நீதி மொழிகள் பன்னி இதோவந்தன
அன்னநடையுடையாள் அழ்குமின்னலிடையாள்
ஆசையாய் தாதியர் அரிகில்வர இதோ வந்
அலைமகள் பதியைத்துதித் திடுவாள் பூர்ணமதி
அலர்ந்தவதனத் துடையவளே இதோ வந்

சுபத்திரை விருத்தம்.

எந்தனுக்கரு கேனிற்கும் எழிலுள்ததாதி மாரே
சுந்திரன் கிரீடிமாலை சூட்டுவானென் றேனும்
அந்தனள் முதலாய் லக்ஷ்மிபதிதனை பூஜைசெய்தும்
விந்தையாம் கொடிஞ்சொல் கேட்டேன்விளம்புவேன்
அதைக்கேழ்ப்பீரே.

வசனம்.—ஆ சகி என் ஆசையான எண்ணத்திற்கு பழு தான வார்த்தையை பலராமரால் கேழ்விப்பட்டேன் அதை எவ்வாரு தெரிவிக்கப்போரேன்.

தாதி வசனம்—அம்மனி அது என்ன சங்கதி தெரிவிப் பாய்.

சுபத்திரை தருவு ராகம்-முகாரி ஏகதாளம்.

அஃஆ அதிசய மொன்று கேள் தாதிகாள் அஃ
ஒஃவோ மோசமதாச்சே உயர்குணசேடி நல்ல
உணர்விலா துரியனுக்கு நான் பாரியாமே அஃ
பலராமரே என் அண்ணன் பரிவாய் முகூர்த்தம் வைக்க
பாருள் விதுரன் தாம்பூலம் மாத்திச் சென்றூராம் அஃ
அந்த இந்திரப்பிரஸ்த்தம் வாழ் அத்தை குந்தியளித்த
அழகனை மாலை சூடிட ஆசை கொண்டண்டி அஃ

சுபத்திரை வசனம்—சகிமார்களே இன்றிரவு வோர் அதிசயமாகிய கினவுகண்டேன் அதை தெரிவிக்கின்றேன் அதின் பலனை தெரிவீப்பீர்களா.

தாதி வசனம்—அம்மணி அவ்வாரே தெரிவிக்கின்றோம் அதை விபரமாக தெரிவிப்பாய்.

சுபத்திரை அகவல் ராகம்-காம்போதி.

அன்புள்ள பாங்கி ஆச்சர்ய மிதுகேள்
இன்பமாய் இன்று இறவினில் நானும்
கன்னலே கண்டக் கினவதைச் சொல்வேன்
மின்மயக் கருடன் மீதினி லொருவர்
எந்தன் பாற்றேன்றி ஏங்காதே என்று
கந்தம் பூமாலையும் காண்பை நீயென்று
விந்தையாய் அவரும் விண்ணினீர் மறைந்தார்
அந்தனன் வேளையிர் அரியமா புருடன்
நாரிபாகன் போல் நல் வேடம்பூண்டு
யாரினில் யாத்திரை பலனெல்லாம் பெற்று
காரிழை யோரே கண்டவ ரென்னை
தூரிமுன் துணிவாய் தூக்கினன் அதுகால்
சுந்தரி மஞ்சனீர் சுகமாக ஆடினேன்
அந்தவேள் தன்னை அதட்டினேன் பாங்கி
விந்தை இக்கினவை விபரமாய்ச் சொன்னேன்
எந்தனுக் கிதன் பலன் எடுத்துரைப்பீரே.

தாதி வசனம்—அம்மணி கருடன்மீதுவந்தவர் லக்ஷிமிநா ரணரூய் இருக்கவேணும் யாத்திரையிலிருந்து வந்தவர் அர்ச்சுன பெருமானே நீ சுபகினவு கண்டதால் அர்ச்சுன பெருமானையே மாலைசூடுவாய் தாயே.

கிருஷ்ணர் தருவு ராகம்-மத்தியமாவதி-ஏக-தாளம்.

வந்தனமும் செய்தேனண்ணு உந்தன் சேவைக்கேஇதோ வ
வாசவன் தனக்கின்றே நாம் மலைபால்
வல்லவா பொங்கலு மிடு நாளிதுவே வ
மாசிலா மன்ன ரிதை யெலாமரந்தால்
மாபுவி தனையே எப்படி ஆளுவார் வ

பல ராமர் வசனம்—தம்பி கோபால கிருஷ்ண ஆசீர்வாதம் நான் சமுசாரபந்தத்தால் இதை எல்லாம்மரந்து விட்டேன் அதை தீர்க்கமாய் தெரிவிப்பாய் அவ்வாரே நடந்துக்கொள்ளுகிரேன்.

கிருஷ்ணர் வசனம்—அண்ணு நாம் வருடத்திற்கு வொரு நாள் இந்திரனுக்கு இரைவத மலைச்சாரலில் பொங்கல் இடுகிற வழக்கமல்லவா அந்த நாள் இன்றுதான் நம்மவர்களாகிய யாதவர்களுக்குதிட்டம் செய்துவிடும் நாமும் போகலாம்.

பல ராமர் வசனம்—தம்பி கோபால கிருஷ்ண இன்றைய தினம் இந்திரனுக்கு ரைவத மலைச்சாரலில் இந்த வடமதுரையிலுள்ள யாவரும் பொங்கல் இடவேணுமென்று பரை அரைவித்துவிடுவாய்.

பொது வசனம்—யாதவர் சுபத்திரைமுதலானவர்களோடு பொங்கல்பூஜைசாமான் கொண்டு இரைவதமலைக்கு செல்வது

பலராமர் தருவு-ராகம்-மோகனம்-ஏக-தாளம்.

போகலாம் நாமே இரைவத மலைக்கே
புத்தியுள கோபால கிருஷ்ண இத்தினம் போ
ஆகம விதிப்படி பொங்கலிடு வோம்
அந்த மலைசார்பனைத்தும் இன்றுமே காண்போம் போ
நந்தவனத்தின் சோலைபார்க்கலாம் நல்லமனதுடன் விரத
மே கார்க்கலாம் போ

கிருஷ்ணர் வசனம்—அரகரா சம்போ மஹாதேவா யென் அப்பனே கோடி நமஸ்காரம் அண்ணா அந்த ஆலாவிருஷத்தி னடியிற் பாரும் சிவபெருமானே வந்து இருக்கின்றனர்.

கிருஷ்ணர் பஜனை தரு நாமாவளி.

அரகரா சம்போ மஹாதேவா ஐயனே யென்னையாள் மஹாதேவா
திருபுர மெரித்தோய் மஹாதேவா தேவனே யென்னையாள் மஹா
தேவா
திருக்கண்பரனே மஹாதேவா திருவே எனையாள் மஹாதேவா
மருமலரணி வோய்மஹாதேவா மாதவா எனையாள்மஹாதேவா

கிருஷ்ணர் தரு-ராகம்-ஆரபி-ஏக-தாளம்.

அரன்வடிவம் போன்றவரை அடர்ந்த ஆலின் அடிகண்டோம்
சிரமிதில் கரங்குவித்து சேவிப்போம் அண்ணாநம்
தூளிதத்தைதரிசித்தால் துயரமெலாம் ஏகிடுமே
காளிவென்றோன் தன் அடியார் கண்ணுறல் வினைபோமே
அரன் அடியார் திருவுருவை அண்ணா நம் தரிசித்தால்
பரமசிவ னருளாலே பாக்கியங்கள் வந்திடுமே
காவியொடு ருத்திராக்ஷம் கண்டபலன் இன்ரேபார்
ஆவிமய நடியாரை ஆவலாய் போற்றுவமே

கிருஷ்ணர் வசனம்—சுவாமி நமஸ்க்காரம்.

பலராமர் வ—அரகரா சம்போ மஹாதேவா நமஸ்க்காரம்

அர்ச்சுனன் வசனம்-ஆசீர்வாதம் மனம்போலவாழ்வீர்கள்

பலராமர் தரு-ராகம் முகாரி அடதாளம்.

நாடிவந்த தென்னமோ நீதானீர் சொல்லுவீர்
மாடியும் புவிவேண்டுமோ மாதவா கனிவேண்டுமோ நா
தனம் ஆடையும் வேண்டுமோ தயிர் பால் வெண்ணெய் வேண்டுமோ
கனம் பெரும் சிவிகையும் கர்த்தனே குடைவேண்டுமோ நா
ஆகுரகர் திருக்கண் ஈசன் அர்ச்சனை சாமான் வேண்டுமோ
யானை பரி ரதமொடு அடர்ந்த சேனை வேண்டுமோ நா

பலராமர் விருத்தம்.

ஐயனே எவரோநீரும் அரிகிலோ மூன்றுகோலின்
கையனே வந்ததேனே கருத்ததோ உறைப்பீராகில்
மெய்யனே அதனைத்தந்து மேலவா ஏவல்செய்வோம்
வையகம் படைத்த ஈசன்போன்றவா வணங்கினேமே.

வசனம்—சுவாமி தங்களுக்கு என் நகரத்திலுள்ளது எது தேவையோ அதைகேட்டால் தடையில்லாமல் தந்து ஏவலும் செய்வோம் தெரிவிப்பீர்

அர்ச்சுனன் விருத்தம்.

ஆதியை துதிப்போருக்கு அரசருள் பூமியேனே
ஆதியை துதிப்போருக்கு ஆடையும் பல்லக்கேனே
ஆதியின் பூஜைக்காக அரிவுள சிஷ்யாள்தேவை
ஆதியை துதிக்கநீரும் அன்பொடு தருகுவீரோ.

வசனம்—அப்பா பலராமா மண் பெண் பொருளாசையை வொழித்து சாக்ஷாத் சிவபெருமானை பூஜிப்பவருக்கு உலகத்தார் அடையவேண்டிய பொருள்கள் யென்னத்திற்கு அதுவேண்டாம் என் சிவபூஜைக்குரிய சிஷயத்தொழில் செய்ய வொருபிள்ளை தேவை நீர் தருவீரா

பலராமர் வசனம்—சுவாமி அவ்வாரே தருகிரேன் தம்பி கோபால கிருஷ்ணு நீ இவருக்கு பணிவிடை செய்கின்றனையா தெரிவிப்பாய்

கிருஷ்ணர் வசனம்—அண்ணு என்னால்முடியவேமுடியாது

அர்ச்சுனன் வசனம்—பலராமரே சிவபூஜை வேளையாய் விட்டது கொடுப்பீரா இல்லையா சொல்லிவிடும் நான் போய்விடுகுரேன்

பலராமர் தரு-ராகம்-மத்தியமாவதி-ரூபக-தாளம்-சாப்பு

தருகின்றேன் தருகின்றேன் சிஷ்யன் எந்தன்
தங்கைதா னிருக்குராள் பாரீர் தானுவை துதிப்பீர் வாரீர் தரு
அரிவுடையாளையா சிவபணி அன்புடன் செய்வாளே இனி
பெருமையா இருக்கும்நற்கனி பிழம்பும்அமுதமும் கேழ்ப்பத

கிருஷ்ணர் தரு-ராகம்-அடாணா-ஆதிதாளம்.

அண்ணா இதுவும் நல்லதா பொய் ஆண்டிவேடம் பூண்டோனுக்கு
அளிக்குரேனென்று சொன்னீர் அண்
அண்ணா நமது தங்கை மண்ணாளும் துரியனும்
விண்ணோரரிய மாலை சூட்டிட வேணும் நாளை அண்
மாதவன் போல் தசகண்டன் முன்பு மாதுசீதையை எடுத்தான்
அரிகிரோ புவியுளே
யாதவ குலத்தாரென்று இழிவாக சொல்லுவாரே
ஆதலால் சொன்னேனிப் போது அரிகுவீர் மோசம் வரும்

கிருஷ்ணர் விருத்தம்.

இப்படி அனேகம்பேர்கள் ஏமாத்தினார்கள் பாரில்
மைப்படிவிழியாள் தங்கை மனத்தினை அரிந்திடாமல்
செப்புவதழகோ சொன்னேன் சிரியேன் சொல்விளையாட்டல்ல
அப்புரம்வருவீர் போவோம் அழகல்ல இதுவுமக்கே.

வசனம—அண்ணா சுபத்திரையைசிஷ்யத்தொழில்செய்யும் படி விட்டால் அது துரியோதனனுக்கு தெரிந்தால் மதிப்பானா அல்லது சுபத்திரையின் மனோஇஷ்டத்தை தெரிந்திரா இது வெல்லாம் பிறகு பிசகுனேரிடும் இப்பேர்ப்பட்ட சன்யாசியை நம்பக்கூடாது வாரும் அப்புரம் போகலாம்

பலராமர் தரு—ராகம்-அடாணா-ஆதி-தாளம்.

வாருதியேழும் பொங்கிடினும் கிருஷ்ணா நான்
வசனித்த சொற் தவறேன் வாரு
நாரிபாகன் போன்றவரை நம்பக்கூடாது கேளென்றாய்
நாரதர்போல் கலகத்தை மூட்டவென் எதிர்நின்றாய்
கூருகுறாய் கொடியச்சொல் அப்புரம் விலகிப்போடா
குணங்கெட்டோ னெந்தனுக்கு தம்பியாயுதித்தாயடா வா
மோகம பொய் களவு கொலை காமமென்பதையும் நீக்கி
முத்திமார்க்கம் சார்ந்தவருக் கித்ததி இழுவுண்டாக்கி
வேகமாய் எனையும் தடுக்கின்றனையே முழுமூடா
வீரருக்கும் வீரன்போல எதித்திட வேண்டாமடா வா
குந்திமாமி தூருவாச முனிவரால் போதம்பெற்றுக்
கொண்டதினால் ஐவர்களை பெற்றெடுத்தாள் அருள்கற்று

இந்தநல்ல சன்யாசியால் சுபத்திறைக்கு யாவுமுண்டாம்
எழில்மிகு சுயோதனன் மணறபுத்திர ருண்டாம் வா

கிருஷ்ணர் வசனம்—அண்ணு இதுசங்கதி துரியோத னன் கேட்டால் கோபிப்பான் உமது இஷ்டம் பின்னுல் வரும் கஷ்டம் நீர் எவ்வாறு தெரிவிக்குறீரோ அவ்வாறே நடந்துக் கொள்ளுகின்றேன்

பலராமர் வசனம்—கோபால கிருஷ்ணு சந்தோஷம் நீ இந்த சன்யாசியை அழைத்துக்கொண்டு போய் கன்னி காமட த்திலிருக்கும் சுபத்திரையி நிடம் வொப்பித்து சுபத்திரையை இவரிட சிவபூஜைக்குரிய சாமான்களே கொடுத்து பக்தி விஸ்வா சத்துடன் நடந்துக்கொள்ளச் சொல்வாய் நான் இந்திரன் பொ ங்கல் பூஜையை முடித்துவிட்டு வருகுரேன்

அர்ச்சுனன் வசனம்—வோய்பலராமரே நான்செய்யவேண் டிய சிவபூஜைவேளே ஆய்விட்டது கோபாலகிருஷ்ணன் தடுக்கி ன்ருன் நீர் அவனேடுதற்கம் செய்துக்கொண்டு இருக்குரீர்நான் இனி உமது கிரகத்திற்கு வரமுடியாது போங்காணும்போம்

பலராமர் தரு-ராகம்-காம்போதீ-ஐம்பை-தாளம்.

ஐயா சன்யாசியே அரியாதவன் சொன்னுல்
அதனே யொருபொருட்டாய் அரிந்தோர் கோபம்கொள்வாரோ
துய்யா எனது தங்கை சுபத்திரை பணிசெய்வாள்
தொழுதன னின்றிடாமல் துரையாய் எழுந்துவாரும் ஐய்
மெய்யனே இனிதடை இல்லைநான் சொன்னேனே
மேலவா தேவர் போற்றும் அரனே பூஜிக்கலாமே
கையை குவித்து தெண்டம் செய்தனன் கோடிநீருப்
கடுக எழுந்துவாரும் கன்னிமடமே சேரும் ஐய்

பலராமர் விருத்தம்.

காலமூன்றுணர்ந்த ஞானம் கார்க்கும் சன்யாசியேகேள்
பாலியதனத்தால் கிருஷ்ணன் பண்ணின குற்றம்தன்னே
சீலரேபொருத்து நாயேன் சிறப்பான மனேக்குவந்தால்
பாலொடு வேணதுண்டு பரமனே துதிக்கலாமே,

வசனம்—சுவாமி கோபம் செய்யாதீர் இக்கிருஷ் கன்னிகா மடம் செல்லுவீர்

கிருஷ்ணன் வசனம்—அர்ச்சுன நான் குடும்பத்தில் பேரில் பிறகு பழிவராமல் தப்பித்துக்கொண்டேன் சுபத்திரை கன்னிகாமடம் செல்லுகின்றவளை நீ உற்றுப் பார்க்கின்றாய் இந சமயம் உன் எண்ணம் முடியாது நீ என்னோடு கன்னிகாமடம் வந்து நீ எவ்விதமாகிலும் சுபத்திரையை வசப்படச் செய்து அழைத்துக்கொண்டு போகலாம்பிறகு எதுவந்தாலும் நான் பார்த்துக்கொள்ளுகிறேன் வருவாய் கன்னிகா மடம் போகலாம்

அர்ச்சுனன் வசனம்—சுவாமிதங்கள்சித்தம் என்பாக்கியம்

கிருஷ்ணன் வசனம்—அம்மா சுபத்திரா நீயே புண்யசாலி சிவபெருமானைப்போன்ற இந்த சன்யாசி செய்யும்சிவபூஜைக்குரிய சாமான்கள் கொடுத்து பக்தி விஸ்வாசத்துடன் நடந்துக் கொள்ளுவாய் நான் போய் வருகின்றேன்

சுபத்திரை வசனம்—சகிமார்களே என்மாமி குந்தமா தேவி இந்தசன்யாசியைப்போன்ற துருவாச முனிவருக்குதொண்டு செய்து ஐந்து மந்திரங்களைப் பெற்று நல்லபுத்திரரை பெற்றாள் அதைப்போல நாமும் இவருக்கு தொண்டு செய்தால் சுயோதனன் கலியாணத்தைதடுத்து நான் அர்ச்சுனபெருமானை விவாகம் செய்துக்கொள்ள அனுக்கிரகம் செய்வாரா.

தாதி வசனம்—அம்மணி அவ்வாரே உன்கோரிக்கைநிறைவேறும் வாரும் சன்யாசியை கண்டுபணியலாம்சுவாமிவந்தனம்

அர்ச்சுனன் விருத்தம்.

அணங்கேகேள் ஆசீர்வாதம் அர்த்தனர் பூஜைக்காக
அணங்கேநன் ஆத்திவில்வம் அருகுமா கங்கைதூபம்
அணங்கின்னம் விபூதிதீபம் அதற்குமே வேணதெல்லாம்
அணங்கே என் அன்பினுளே அருங்கிளி தருவிப்பாயே.

வசனம்—ரதியைப்போன்ற சுபத்திரா ஆசீர்வாதம் நீகிளிப்போல வார்த்தை ஆடுகின்றாய் நான் செய்யவேண்டிய பூஜைக்காக ஆத்திமலர் வில்வம் கங்கை விபூதி தூபதீப சாமான்கள் யாவும் கொண்டுவருவாய்

..ரை தரு-ராகம்-எதுகுல காம்போதி-தாளம்-ரூபகம்.

இதுவென்ன விதிவசமோ அம்மா என்னை அனங்கே
யென்றார் அடி இ
பொதுவானோர் இப்படி புகலவும் நியாயமோ
புத்தியுள்ள தாதி அக்கருத் துரைப்பாய் இது
கிளியென்றும் மயிலேயென்றும் சொல்லக்
கேட்டீர்கள் அச்சொல் நன்றோ நல்லகி
அளிகள் மொய்க்கும் கூந்தல் உள்ள தாதிமாரே
ஆ ஆ அதிசயம் எதியானோர் சொல்வாரோ இது

சுபத்திரை விருத்தம்.

அன்புள்ள தாதியென்ன அன்னிதமிச் சொல்நன்றோ
தென்புடன் கிரிடிமாலை சூட்டிடவேண்டு மென்றே [ல்
இன்பமாய் கிருஷ்ணர் சொல்போல் எதிபணிசெய்யவந்தா
புன்சொலால் அன்னமென்றார் புகலுவீர் நீங்களம்மா.

வசனம்—மண் பெண் பொருள் ஆசை அற்ற தபசிரேஷ்டர்கள் பெண்களைக் கண்டால் ரதியே அன்னமே கிளியே மயிலே யென்றும் சொல்வார்களா தெரிவிப்பீர்கள்

தாதி வசனம் அம்மணி தபசிகள் குழந்தைகளைப்போன்றவர்கள் வுண்மையில் நீரதியைப்போல இருப்பதாலும் கிளியைப்போல பேசுவதாலும் உண்மையை செப்பினாரே அல்லது பாமரர் கருத்தாக சொன்னவர் அல்ல குற்றமில்லை தாயே

சுபத்திரை தருவு-ராகம்-ஆரபி-தாளம்-ரூபக-சாப்பு.

ஆனலெக்தனுடன் வாரீர் ஆ ஆ தோழிக..
அத்திருக்கண் ஈசர்க்கு புட்பங்கள் பரிப்போ..
அருகுதும்பை வில்வம்வேண தருப்போம் வாருங்..
ஆத்திமலர் ரோஜாவிது ஆ ஆ பாருங்..
பொற்குடத்தில் ஜலம் கொண்டு போவோம் வாருங்..
பூவையர்காள் தூளிதமும் தீபம் வையுங்..

சுபத்திரை வசனம்—சகிமார்களே சிவபூஜைக்குரியசா..ன்கள் தயாராய் விட்டதாய் சன்யாசிக்கு தெரிவித்துவிடுங்க..

அர்ச்சுனன் தருவு-ராகம்-கண்டா-அட-தாளம்.

இந்த பொற்குட ஜலமெடுத்தேன் கையில் தருவாய் தருவாய்
 தருவாய்
எடுத்தென் கையிற் தருவாய் ஏகநாதனைப் பணிவாய்
மந்தாரை வில்வம் அருகு தும்பமலர் தருவாய் தருவாய்
 தருவாய்
தும்பமலரும் தருவாய் தூயபரனைப் பணிவாய்
உந்தன் மனக்குறையை செப்பி தூப்தீபம் தருவாய் தருவாய்
 தருவாய்
தூபதீபமே தருவாய் தோகையே நீ சுகம்பெருவாய்
கன்னல்வில் ஆக்கூர் திருக்கண் ஈசரை தொழுவாய் தொ
 ழுவாய் தொழுவாய்
திருக்கண்ணனைத் தொழுவாய் தேவன் அருளை பெருவாய்

அர்ச்சுனன் விருத்தம்.

எந்தனுக்கினிய சிவி என்மொழிப்படி நீ செய்ய [ன்
சுந்தரிமகிழ்ந்தேன்யாத்திரை செய்பலன் இன்றேகண்டே
இந்தமா மடத்தில்காணும் இயம்புவேன் பணிதானென்று
சிந்தையோ நல்லதாக செய்யுவாய் சுகுணிநீயே.

வசனம்—சுபத்திரா நான் யாத்திரைசெய்த பலன் கிடைத்துவிட்டது இன்னமும் தெரிவிப்பதை கவனிப்பாய்

அர்ச்சுனன் தருவு-இங்கிலீஸ் நோட்டு-சாப்பு-ஏகதாளம்.

மஞ்சமீதில் மான் புலித்தோல் மாது விரிப்பாய்
மணமுளப்பழம் பால் கன்னல் கூட்டியே வைப்பாய்
கொஞ்சமாய் திருவிளக் கேற்றியே நீவைப்பாய்
கோதையே வெட்டி மயில் விசிறியும் வைப்பாய்
இந்ததண்டு கமண்டலம் எடுத்து வைப்பாய்
எழிலுள மாதே விசிறியுமே நிற்பாய்

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
184431

அர்ச்சுனன் விருத்தம்.

இந்தனாள் வரையில் யாத்திரை எங்குமே திரிந்துதிரேகம்
நொந்துஞ னிங்குவந்தேன் நோம்புகள் னூற்ற மாதே
இந்தநன் புலித்தோல் மீது இத்ததிச யனிக்கின்றேன்
சுந்தரி எந்தன் பாதம் சுருக்கினிற் பிடித்திடாயே

வசனம்—சுபத்திரா நான்யாத்திரை செய்துவந்ததில் என் நால்கள் நோவுரது உனது கரத்தினல் அழுந்த பிடிப்பாய்.

சுபத்திரை தரு-ராகம்-தேசிகதோடி-அடதாளம்.

என்னுச் சொல்வேன் தாதி அடி என் குறையைத் தாதி
கன்னல் மொழி தாதி நானும் கலங்குரனே தாதி
வாள்விஜயன் மாலை சூட்ட வெண்ணினனே தாதி
காளை சன்யாசியும் காலை பிடியென்றுறே தாதி
அண்ணன் சொல்லைத் தள்ள நீதியாகுமடி தாதி
வண்ணக் கிளி தாதி சொல்வீர் வஞ்சமிதோ தாதி

சுபத்திரை விருத்தம்.

ஆசையாய் கிரிடிக்கேனுன் அன்போடு பணிபே செய்ய
வாசவன் இறைவனுன வண்ணலைப் பூஜை செய்தும்
வேசிகள் போல என்னை விவறுமே கருதலாமோ
ஈசனுர் செயலோ தாதி இவர்பாதம் பிடியென்றுரே.

வசனம்—சகிமார்களே நான் அர்ச்சுனபெருமானை மாலை சூடி அவரிட பாதங்களை பிடிக்க எண்ணினேன் இந்த சன்யாசியானவர் என் மனத்தினை அரியாமல் தன்பாதங்களை பிடிக்கச் சொல்லினர் என்ன செய்வேன் அதற்கு நீதி இருந்தால் தெரிவிப்பீர்கள்

தாதி விருத்தம்.

அன்புள்ள தாயே கேளாய் அரனுக்கு அடியாருன
அன்னவர் தனக்கே யேவல் ஆசையாய் செய்தால் குற்றம்
கன்னலேவருது பின்னும் கருதிடில் குழந்தை போன்றுர்
வன்மன மிலாமல் செய்தால் வாழ்குவாய் கிரீடிபாலே.

வசனம்—தாயே சிவபெருமான் அடியாருக்கு ஏவல்செய் தால் குற்றமாகாது மேலும் தபசிகள் வுலகத் தாருக்கு குழந் தை முறைமையாகும் அம்மணி.

அர்ச்சுனன் வசனம்—தாதிகளே சுபத்திரையின் கருத் தென்ன அதை தெரிவிப்பீர்கள்

தாதி வசனம்—சுவாமிதான் அர்ச்சுனபெருமாளை மாலே சூடி அவரிட பாதத்தை பிடிக்க வேண்டுமென்கிற கருத்தாம் அதற்காகவே இச்சமயம் வருந்துகின்றனன்.

அர்ச்சுனன் விருத்தம்.

கல்லினைத் தெய்வமென்று கருதியே துதிப்பார்போல
எல்லையில் கிரீடி நானெனன்றெண்ணியே மனங்கோணுமல்
அல்லில்வோர் ஜாமமட்டும் ஆசைகொள் மணுளன்பேரில்
நல்லதாய் கீதம்பாடி நான் சொன்னப்பணி செய்வாயே.

வசனம்—சுபத்திரா இங்கனம் கிடக்கும் கற்களை இஷ்ட்டலிங் கமாக பாவித்து அந்த கயிலாயபதியே இங்கனம் இருப்பதை ப்போல் பெரியோர் எவ்வாறு பூஜைசெய்து வருகிறார்களோ அவ்வாரு என்னை அந்த அர்ச்சுன பெருமாளுக கருதி அவன் மீது மனமும் என் மீதுகரமும் வைத்து ஏவல் செய்தால் அது அர்ச்சுனனுக்கு ஏவல் செய்ததாகும் இதில் குற்றமில்லை தெரி வித்தேன். (சு. வ.) சகி சன்யாசி செப்பியது நியாயமா.

தாதிகள் வசனம்—அம்மணி சன்யாசி சொல்லியதும் நியாயந்தான் பணிசெய்யலாம்.

சுபத்திரை-தருவு-ராகம்-காம்போதி-ரூபகதாளம்.

கண்ணு உன்செயலிது இதோ கால் கை பிடிக்கலானேன்
அண்ணு என்னிடக் குரைகளைத்தீர்ப்பாய் அந்த விஜயனென்றே
பன்னீர் தூவிடுவீர் இன்னம் பாசமாய் பாடிடுவீர்
இன்னம் கந்தமும் பூசிடுவீர் அம்மா இவரேவிஜயனென்று
இந்த விசிரிகொண்டு நன்ருய் இத்ததி வீசிடுவீர் [ணும்.
சுந்திர ராகிய காண்டீபன் தானென சொற்பணி செய்யலா

சுபத்திரை வசனம்—சகிமார்களே, சன்யாசி நித்திரையி லிருக்கின்றார் நாம் அந்தபுரம் சென்றிருந்து நாளைய சூரியஉதை யத்திற்கெல்லாம் வந்து விடலாம் வாருங்கள்.

அர்ச்சுனன்-தருவு-ராகம்- எதுகுலகாம்போதி-அடதாளம்.

என்னமோ மனதுநாடுதே இந்த இடத்தினில் சுபத்திரை
எழிலே நான்—கண்டேனின்னாள் (என்)
கன்னல் வில்லோன் மாரன் பாபிகணையை எந்தன்மேல்
தூவக்—கருத்துமாறுதே என்செய்வேன் (என்)
நித்திரைவாவுமில்லையே இந்த நிலவது கொடுந்தணல்
வீசுது என்ன செய்வேன் (நித்)
எத்திசையிற் போயினளோ இங்கனம் இருக்கின்றாளோ
ஏதோ நானேறு அரியேன் ஆ. ஆ. (என்)

சுபத்திரை வசனம்—சகிமார்களே, அந்த சன்யாசிபேரில் எனக்கு வொருசந்தேகம் அதை அந்த சன்யாசியை கேழ்க்க வேண்டும் வாருங்கள் அவரிடம் போகலாம்.

சுபத்திரை விருத்தம்.

சன்யாசி யொன்றுகேளும் சமர்செய்யு மன்னர்போல
உன்னிடக்கரம் தோள்தன்னில் யுத்தம்செய்பவர்போல் காய்பு
இன்னமும் குறிகள் கண்டேன் எந்தவூர் பெயர்தானென்ன
தன்னிகரிலாத ஈசன்போன்றவா யுரைத்திடீரே.

வசனம் — சுவாமிவந்தனம் இவ்வுலகில் யுத்தவீரருக்கு இருக்கும் குறியைப்போல் உமது கரத்திலும் தோளிலும் முழங் தாளிலும் தழும்புகள் இருக்கிறதே அது என்னகாரணம் உமது நாமதேயம் என்ன, உமது நகரம் யாது தெரிவிப்பீர்.

அர்ச்சுனன் விருத்தம்.

விருத்தாந்த மென்ன வென்றால் விள்ம்புவேன் மாதே என்பேர்
திருத்தண்ட சன்யாசியென்றும் தீதிலா விஜயனென்பார்
பெருத்தமா எனது இல்லில் பிழைநேர யாத்திரை காலம்
கருத்த இத்தழும்பு ஆச்சு கன்னிநீ அறிந்திடாயே.

வசனம்—சுபத்திரு என்நகரம் இந்திரபிரஸ்தம் என்பெயர் திருத்தண்ட சன்யாசி யென்றும் விஜயரிஷி யென்றும் சொல் வார்கள் என் குடும்பத்தில் வோர் குற்றம் நேர்ந்ததால் யாத்தி ரை செய்ய நேர்ந்தது அந்த யாத்திரையில்-யோகதண்டத்தை-என் சரீரத்திற்கு ஆதரவாகவைத்துக்கொண்டு யோகத்தை முடிப்பதால்-இந்த தழும்புகள் உண்டாயிற்று தெரிந்துக் கொள்ளுவாய்.

சுபத்திரை வசனம்—சுவாமி சந்தோஷம் தாங்கள் இந்திர பிரஸ்தம் என்பதால் ஆங்கு என் மாமிகுந்த மாதேவியும் அந்த அம்மன் பிள்ளைகள் ஐந்துபேரும் க்ஷேமமா தெரிவிப்பீர்.

அர்ச்சுனன் வசனம்—சுபத்திரா, அந்த குந்தமாதேவி தெரியும் அவளிட பிள்ளைகள் ஐந்துபேர் என்பதால் அவர்களிட நாமதேயத்தைச் சொல்வாய் தெரிவிக்கின்றேன்.

சுபத்திரை-தருவு-ராகம்-எதுகுலகாம்போதி-அடதாளம்.

ஐயா பாண்டுமைந்தரில் ஐவருக்கு மூத்த
அறிவிர் மிகுந்தவராம் தருமபூபதி யென்பார்
மெய்யா அவர்க்கிளையோர் அதிபல தீரரும்
மேலவா பீமசேனர் காண்பீரே
துய்யா கேளின்னமும் துரைபூபன் நகுலரும்
தூயமனத்தோர் சகாதேவரே (ஐயா)

அர்ச்சுனன் வசனம்—சுபத்திரா, பாண்டுபுத்திரரில் நான்கு பேரிட நாமதேயத்தை தெரிவித்தாய் அதில் வொருவன் நாம தேயத்தை ஏன்சொல்லவில்லை அதை தெரிவிப்பாய் தாதிகளே சுபத்திரை ஏன் பேசவில்லை—நீங்களாயினும் சொல்லுங்கள்.

தாதி விருத்தம்.

ஆவியைப் போன்ற அந்த அர்ச்சுனபெருமானுக்கே
தேவியாய் ஆகவெண்ணி திருமாலை துதித்துவாருள்
வோவியம் போன்றகிரிடி உம்மைப்போல் யாத்திரையானர்
காவியைப்பூண்ட அய்யா கண்டீரோ தெரிவிப்பீரே.

வசனம்—சுவாமி எங்கள் அரசி அந்த அர்ச்சுன பெரு மானை மாலைசூட்டக் கருதியவளாதலால் அவரிட நாமதேயத்தை மறைத்தனள் அந்த கிரிடி யாத்திரை செய்வதாக எங்களுக்கும் தெரியும்—நீர் அவரை கண்டிருப்பீரா தெரிவிப்பீர்.

அர்ச்சுனனுக்கும் சுபத்திரைக்கும் வாது தருவு.

ராகம்-மோகனம்-தாளம்-ரூபகசாப்பு.

அர்ச்—என்னுடன் யாத்திரையாய் கிரிடியும் வந்தோன்
இன்னகர் வருவதாய் செப்பினன்
அன்னவன் சன்யாசியானதால் பெண்வேண்டான்
அவனை நீ நம்பாதே ஒமாதே.

சுபத்திரை தருவு, ராகம் தோடி, தாளம் ரூபகம்.

சுபத்—அவரே எந்தன்-நாதனுகும் அன்னவரைக் காட்டுவீரே
தவனிலையிற் தேர்ந்தவரே-தாட்பணிந்தேன் தயைசெய் [வீரே.

அர்ச்சுனன் தருவு, ராகம் மோகனம், தாளம் ரூபக சாப்பு.

சொல்குரே நின்ன மும்மாதேகேள் அவன்
சூதனுகும் நல்ல தூரியனை
மெல்லியே-நீ-மாலைசூட்டினல் யாவரும்
மேன்மையாய் உனை துதிப்பார்களே

சுபத்திரை தருவு, ராகம் தோடி, தாளம் ரூபகம்.

துதிக்கவேண்டாம், ஒருவரென்னை தூயமுள தபத்தோரே
மதிகுலமும் தழைக்கவேணும் மன்னரவர்போலு முண்டோ.

அர்ச்சுனன் தருவு, ராகம் மோகனம், தாளம் ரூபக சாப்பு.

மதிகுலவணங் காமுடியனை இந்த
மானிலமன்னர்கள் யாவரும்
கதியென கப்பங்கள் செலுத்தியே போற்றுரார்
காண்பாய்பின் கைகட்டி நிற்குறற்.

சுபத்திரை தருவு, ராகம் தோடி, தாளம் ரூபகம்.

மன்னர் மன்னர் பணிந்திட்டாலு மதிக்கிலேன் தரியனேனு
ம்
அன்னவர் வந்திருந்தும் என்பால் அணுகாவிடில் ஆவிவையே
ன்

அர்ச்சுனன் சொல்வது.

கண்மணி என் மனம் ஒருவாரா யிருப்பதால் எவ்விதமே
னும் தயைசெய்து ஆதரிப்பாய் என்னை ஆலிங்கனம் செய்து
முத்தமளிப்பா யென்று நம்பி ஓடிவருகின்றேன்.

சுபத்திரை தருவு, ராகம் முகாரி, ஏகதாளம்.

ஆசகிமாரே-எந்தன்-அரிய கற்பு கிலையை அரியானே
சன்யாசியும் (ஆ)
ஓ ஓ மோசமாச்சுதே வுத்தமிகாள் அவனெங்கே
உணர்விலனே அவனும்-வோடிவந்தா னெந்தன்பாலே (ஆ)
அண்ணல் கிருஷ்ணருடனே அண்ணிமார் யாவருமில்லை
ஆ ஆ என்ன மோசமிது அய்யோ இனி என்ன செய்வேன் (ஆ)

அர்ச்சுனன் விருத்தம்.

மாதே சிந்தனைப்படவேண்டாம் நீ மகிழ்வோடு கோரிய வன்ன
[னே
கோதே இந்திரப்பிரஸ்தம் விட்டு குவலயயாத்திரை முடிவுகண்
டேன்
நீதேதஇலையடி ஸ்ரீ கிருஷ்ணர் திருவருளாலே இவ்வேடம்
சூதாய் கொண்டேன் என்வடிவை சுந்தரி இத்ததிகாண்பாயே.

வசனம்—கண்மணி சுபத்திரு ஸ்ரீ கிருஷ்ணர் அனுக்கிர
கத்தால் சன்யாசி வேடம்பூண்டு இங்கு வந்தேன் என்சுயரூபத்
தை காட்டுகின்றேன் தரிசிப்பாய்.

அர்ச்சுனன் தருவு, ராகம் மோகனம், அடதாளம்.

வந்தனன்பாரீர் கிரீடி இதோ—வந்தனன் பாரீர் (வந்)
வந்தனன் சுபத்திரையு மகிழ்ந்திட
வானவர்பூமழை மிகச்சொரிந்திட (வந்)
அந்திரத்தவரு ஆசீரும்கூரிட
அங்கனே மேளமும் பேரிமுழங்கிட. (வந்)

சுபத்திரை வசனம்—நாதாவந்தனம், எனை மணம்புரிவீர் உமது சொரூபத்தை அரியாமல் விட்டேன் மன்னிப்பீர்சுவாமி

கிருஷ்ணர் தருவு, ராகம் தோடி, ஏகதாளம்.

எண்ணம் முடித்துக் கொண்டேனே—எந்தன் (எண்)
அண்ணன்பலராமரை ஆ ஆ மயக்கிவிட்டேன்
அன்னவருமிங்கு—கிரிடியை அழைத்திட்டேன் (எண்)
விண்ணவர் கோனுலே மணமுமுடித்திடுவேன்
வேந்தனும் துரியனை ஏமாரச்செய்திடுவேன், (எண்)

கிருஷ்ணர் வசனம்—சபாஷ் பலராமரை ஏமாற்றிவிட்டேன். அர்ச்சுனன் எண்ணமும்-சுபத்திரை கோரிக்கையும் என் கருத்தும் முடிந்துவிட்டது அர்ச்சுனு நீயும் சுபத்திரையும் க்ஷேமமா சரி பலராமர் இங்கு இருந்தால் கலகம்நேரும்-சூது செய்து பலராமரோடு என்குடும்பத்தாரை-சமுத்திரத்தின் மத்தியில் இருக்கும்-தீவில்-கொண்டுபோய் விட்டு விட்டு சீக்கிரம் வருகின்றேன் இச்சங்கதி பிறர் அரியாமல் இருங்கள்.

கிருஷ்ணர் விருத்தம்.

ஆண்டுக்கு வோர்நாள் ஞமும் அந்தமா ஆழிதன்னில்
வேண்டிக்கொள் ஈசனை விமலனர் பூஜை போட
வேண்டுமே இன்று அன்னாள் வேந்தனே வந்ததாலே
ஆண்டவன் அருட்கிடைக்கும் அண்ணா நீர்வருவீர் போவோம்.

வசனம்—அண்ணா நாம் வருடத்திற்கு ஒருனாள் - சமுத்திரத்திலுள்ள தீவில் ஆண்டவன் பூஜைபோடுகிர நாள் இன்று தான்-வாரும் குடும்பசமேதராய் போகலாம்.

பலராமர் வசனம்—கோபாலகிருஷ்ணா வாஸ்தவம்தான் போகலாம் அப்பா சேனாதிபதி நாங்கள் வருகிறவரையில் வட மதுரையில் களவும்-கலகமுதலானது நடவவொட்டாமல் ஜாக்கிரதையாக பாதுகாப்பீர்-சுபத்திரை கன்னிகாமடத்தி லிருக்கின்றாள்-அவளுக்கு ஏதேனும் குறைவு வரப்போகிறது-தம்பி கோபால கிருஷ்ணா-நாம் தீவுக்கு செல்ல படகு தயாராக இருக்கிறதா.

கிருஷ்ணர் வசனம்—அண்ணா படகு வோட்டுபவர்-முன்னமே தயாராய்விட்டார்கள்-இந்த படகில் ஏரும் மற்றவரும் ஏருங்கள் படகை வோட்டுகிரவனே-சீக்கிரம் கொண்டு போவாய்.

படகர் ஏலப்பாட்டு.

ஏலாலோ கிருஷ்ணையா யேலலிலோ (ஏலா)
ஸ்ரீகிருஷ்ணா ஜெயஜெயமே—சுபத்திரை
சீர்பெருக வோடம்தள் வோம் (ஸ்ரீ)
கார்பொழியும் வடமதுரை வசுதேவரீன்ற
காசினியாள் பலராமன்—கோபாலன்வருக
தார்புனையும் அம்மாது மணவேள்வி கொள்ள
தாசர்களே இத்ததியில் சுரந்தஜெலம்மெள்ள
பார்மீது உள்ளவர்கள் பக்ஷமேகொள்ள
பரிவாக சுங்கானைலகு வாகத்தள்ள
கூர்வாளிபோல் படகு நேராகச் செல்ல
கோவிந்தா வச்சுதா வென்று ணம்சொல்ல
தீராத வல்வினைகள் தீருமே வல்ல
தேவாதி தேவனைநாம் மனத்தினிற் கொள்ள (ஏலா)

படகர் வசனம்.—சுவாமி கோபால கிருஷ்ணரே, பலராமரே, நீங்கள் கோரியதீவுக்கு படகு வந்துவிட்டது எங்களுக்குரிய சன்மானம் தாரும்.

கிருஷ்ணர் வசனம்—அண்ணா நாம் கடலிலுள்ள தீவுக்கு வந்து விட்டோம் நானே சகல சாமான்களையும் எடுத்து கொடுக்கின்றேன்—உமது கரத்தினால் சிவபூஜை நடக்கட்டும்.

கிருஷ்ணர் தரு, முகாரி ராகம், அடதாளம்.

சிவபூஜை செய்வோம் நாமினி அண்ணா அந்த
சனகாதியர் தொழும் சாயுச்சய மாகிய (சிவ)
சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ (சிவ)
அரகரா அரகரா அரகரா அரகரா (சிவ)

இளனீர் பசுந்தயிர் இனிய தேன் பாலுடன் இனிப்பான
வாழை பிலா மாங்கதலியோடு (சிவ)
தூய நீர் எண்ணை வில்வம்-தணவரே இன்னம் வேண
தோத்திர தேவாரங்கள் பாடியே அன்னம்வைத்த (சிவ

கிருஷ்ணர் வசனம்—அண்ணா பலராமரே-சிவபூஜை ஆய் விட்டது இன்று இரவு முழுதும் நாம் அனைவரும் சிவபெருமான் சன்னிதானத்தில் இருக்கவேண்டும் அவ்வாரே இருப்போமா.

பலராமர் வசனம்—அவ்வாரே இருப்போம் தம்பி கோபால கிருஷ்ணா.

கிருஷ்ணர் வசனம்—சரி, ஏமாற்றிவிட்டேன் இனி நான் அர்ச்சுனன் இருப்பிடம் செல்லுகின்றேன்.

அர்ச்சுனா பலராமர் தீவில் இருக்குறார்-நீ கோரியவாரு இந்திரன் இந்திராணி இவர்கள் கலியாணத்திற் குரிய மாங்கல்ய முதல் யாவும் கொண்டுவந்து இருக்குறார்கள் இனி விவாகம் நடக்கவேண்டியதுதான்—ஏ வசிட்ட மாமுனிவரே சீக்கிரம் வாரும்.

வசிட்டர் பஜனை தரு.

விடலே நாரணா கோவிந்தா அண்ணா
வேதஸ் ரூபா கோவிந்தா
கடல்சயனா அரிகோவிந்தா அண்ணா
காசாம்புமாயா கோவிந்தா
இருதயத் தொளியே கோவிந்தா அண்ணா
ஏகமாம் பொருளே கோவிந்தா
நருமலர்பாதா கோவிந்தா அண்ணா
நம்பினேன் வினை தீரும் கோவிந்தா
நாதவிந்துருவே கோவிந்தா அண்ணா
நான்மறை வொலியே கோவிந்தா
மாதவவடிவே கோவிந்தா அண்ணா
மவுனத் திருவே கோவிந்தா. (கோ)

வசிட்டர் வசனம்—ஏ கோபாலகிருஷ்ணா ஆசீர்வாதம் என்னை ஏன் அழைத்தீர் தெரிவிப்பீர்.

கிருஷ்ணர் வசனம்—சுவாமி வந்தனம், அர்ச்சுனனுக்கும் என் தங்கை சுபத்திரைக்கும் விவாகம் செய்விக்க வும்மைக் கோரினேன் இதோ தேவேந்திராதி முனிவரும் வந்து இருக்கின்றனர் விவாகமாகட்டும்.

வசிட்டர் வசனம்—அர்ச்சுன சுபத்திரா ஆசீர்வாதம் இந்த மணவரைமீது எழுந்திருங்கள்.

வசிட்டர் தருவு, இங்கிலீஷ் னேட்டு, ஏகதாளம்.

மாங்கல்ய சுபமே மதுரையில் (மா)
மாதவ வசிட்டர் இந்திரன் வாழ்த்திட
மாது சுபத்திரை தனக்கும் கிரிடிக்கும் (மா)
அண்ணன் பலராமர் இல்லாத காலத்தில்
ஆதிமூலனுன மாயவன் செய்திடும் (மா)
அரம்பை மாதர்கள் ஆடிபாடிடவும்
ஆ ஆ தேவமாதர் ஆலம் ஏந்திடவும். (மா)

கிருஷ்ணர் வசனம்—அம்மா இந்திருணி-இந்திரு-வசிட்ட மாமுனிவரே. நீங்கள் ஆசீர் செப்பி உங்களுடைய இருப்பிடம் போய்விடுங்கள்-அர்ச்சுனு-நீ சுபத்திரையை அழைத்துக்கொண்டு இந்த இரதத்தின்மீதே இந்திரப்பிரஸ்தம் செல்லுங்கள் நான் எப்போதும்போல் அந்த சமுத்திரதீவுக்கே செல்லுகின்ரேன்.

சுபத்திரை வசனம்—நாதா நாரேரதம் விடுகுரேன்.

சுபத்திரை-தரு-நொண்டிச்சிந்து.

அஃ ஆ ரதம்போகுரவேகமதை ஆணழகவர்ச்சுனரே
வெகுவேடிக்கை.
ஓஃ வோ சவுக்கெடுத்தேன் இத்ததியில் உத்தமரே
சென்னிரமாம் தூளெழும்ப (அஃ)
இந்திரப்பிரஸ்த மார்க்கமாய்—நாடியது=ஏகுரது
விறைவாக என்னவிந்தைகாண்
வந்தோம் வெகுதூலவே நகர்விட்டு—வருகுரார்
சேவகரும பாரு மிதனே. (அஃ)

சேனதிபதி வசனம்—ஆ ஆ ஆ காவற்காரரே ஆயிதங்களோடு வோடிவாருங்கள்.

சேனதிபதி தரு-ராகம்-நாட்டைதாளம்-ரூபக சாப்பு.

அண்ணமாரே யோடிவாருங்கள் சுபத்திராதேவியைக்
கொடுபோருன் பாருங்கள்
கண்ணனுடபலராமரும் இங்கில்லே
காதக சன்யாசி திருடனே (அண்)
வேலோடு தடிகொண்டு வாருங்கள் இவனே
வெல்லுவோம் கும்பலாய் சேருங்கள்

ஞாலத்தில் பொன்வகை திருடுவார் கள்ளர்கள்
பெண்தன்னை கொடுபோருன் கொல்லுவீர். (அண்)

காவலர்விருத்தம்.

ஆடடாதிருடா நீயும் அரியாத சுபத்திரையாளை
தேரின் மீதெடுத்து வைத்து திருடன்போல் செல்லலுற்ருய்
தீரத்தை அரியவந்தோம் தேரினை நிறுத்து அல்லால்
பாரடாபயலேவுன்னை பஞ்சுபோல் வதைசெய்வோமே.

வசனம்—அடேபயலே சன்யாசி உலகத்தில் திருடர்கள் பூஷணங்களை திருடுவார்கள் நீயோ சுபத்திரையைத் திருடி தேரின்மீது வைத்துக்கொண்டு போகுராய் தேரை நிறுத்து அல்லாவிடில் கொல்லுவோம்.

அர்ச்சுனன் விருத்தம்.

மந்திரிமார்களென்னுமரிவிலா மூடரேகேள்
சுந்தர சுபத்திரையாளை சொந்தத்தால் எடுத்துப்போரேன்
தந்திரம் சொல்வல்லோரே தாழ்ந்துநீர் பணிந்தாலல்லால்
இந்தநாள் உம்மைக்கொன்று எமபுரம் அனுப்புவேனே.

வசனம்—அடா மூடர்களே சுபத்திரையை சொந்தத்திருல் கொண்டுப்போகுரேன் நீங்கள் என்னைப்பணியாவிடில் உங்கள் ஆவியை எமபுரிக்கு அனுப்புகுரேன்பார்.

சேனதிபதிக்கும் அர்ச்சுனருக்கும் வாது.

ராகம்-நாட்டை-தாளம்-ரூபக-சாப்பு.

சேனதி—என்னடா சன்யாசியே நீ எதிர்த்துப்பேசுருய்
ஏமன்பால் சேருவையுந்தன் கையைவீசுருய் (என்)
அர்சு — சேர்த்திட உங்களாலாமோ அறிவிலாதோரே
சேவகத்திரமையுண்டா வாரீர் மூடரே (சே)
சேனதி—மூடரென்று சொல்லவந்தாய் ஆ ஆ நில்லடா
மூர்க்கனே சரம்தொடுத்தோம் தப்பிச்செல்லடா(மூட
அர்ச் — செல்லடா வென்குரீர் ஞானே காண்டீபனடா
சிதைப்பேனும்மைப் பணியாவிடில் பாணம்பாரடா
சேனதி—காண்டீபனென்ருல் இவ்வாறு செய்யலாமோ சொல்
கந்தன் பலராமர்வந்தால் போகலாம் நீ—நில் (கா)
அர்ச்சு — நில்லென்று என்னை தடுக்க உங்களால் ஆமோ
நீட்டினேன் ஒருசரத்தை ரதமும் நிற்குமோ. (நில்)

காவலர் வசனம்—ஆ ஆ வீராதி விரர்களே, இவர் அர்ச்சுனராஜனென்பதால் இவரை ஜெயிக்க நம்மால் முடியாது பலராமர் கிருஷ்ணர் இங்கனம் இல்லை அவர்கள் சீக்கிரம் வரும் நிமித்தம் ஆபத்துனேர்ந்ததென இந்த பேரிகையை அறையுங்கள் அர்ச்சுனராஜன் சுபத்திரையை இரதத்தில் வைத்துக்கொண்டு போகுறுன் திடும்; திடும், திடும்.

கிருஷ்ணர் விருத்தம்.

அண்ணுகேள் நமது தங்கையாகிய சுபத்திரையாளை
இண்ணே அச்சன்யாசித்தான் எழிற்தேரிர் கொடுபோருனும்
விண்ணவற்க்கிறைவனுன வீசனுர் பூஜையாச்சு
தெண்ணலால் அச்சொல்கேளும் தீரனேவாரீர் போவோம்.

வசனம்—அண்ணு நாம் மோசம்போனேம் தென்னல் காற்றினுல் கேழ்ப்பதை கவனியும் நமது தங்கை சுபத்திரையை திருத்தண்ட சன்யாசியானவன் அர்ச்சுனனும் தேரின் மீது வைத்துக்கொண்டு போகின்றுனும் என்னசெய்யலாம்.

பலராமர் விருத்தம்.

அருமையாம் நமது தங்கையாகிய சுபத்திரையாளை
பெருமையாம் துரியனுக்கு பிரியமாயளிக்க எண்ணேன்
தருமனுக்கிளைவனுன தனஞ்சயன் சூதுசெய்து
இருமாப்பால் கொடுபோம் அன்னேன் எழிற்சிரம்தரிக்கின்றேனே.

பலராமர் தருவு, ராகம் மோகனம், ரூபக சாப்பு தாளம்.

ஆ ஆ வாருங்கள் படகிலேருங்கள் அவன் ஆவியை
வாங்குவோம் வாருங்கள் (ஆ)
வில்லைப்பிடியுங்கள் வோடிக்கொல்லுங்கள் வுங்கள்
வீரம்விடாமலே நில்லுங்கள். (ஆ)

கிருஷ்ணர் தருவு, ராகம் நாட்டை, ஏகதாளம்.

எப்படி எடுத்தேகுறுன் பார்ப்போம் அவன் (எப்)
மைப்படிந்த விழியினள் சுபத்திரையை ரதத்தில்
மன்னவனே நாமும் இங்கு இல்லாத காலத்தில். (எப்)

பலராமர் தருவு, ராகம் நாட்டை, ஏகதாளம்.

கலப்பை ஆயுதமிதோ எடுத்தேன் தம்பி காண்டிபனை
கொல்லவென அடுத்தேன்

தலமிசை வெகுதூரம் போய்விட்டது அந்தரதம்
தாக்ஷண்யமு மினியேது தலைதனை யுடைக்குரேன். (கல)

கிருஷ்ணர் தருவு.

நால்வகை சேனையை வோடிவரச்சொல் அண்ணு
நாற்கோணமாய் படைகளை நிற்கச் சொல்
சூலமொடு கதைவாளும் வேலுடனே வெகுபல
சூரரை அவனைக்கொல்ல ஏவுவீர் விறைவதாக. (எப்)

கிருஷ்ணர் வசனம்—அண்ணு நமது நால்வகை சேனைகளை அணிவகுத்து அர்ச்சுனனை கொல்லும்படி யெச்சரிப்பீர்.

பலராமர் தருவு, ராகம் நாட்டை, ஏகதாளம்.

அஃ ஆ கிரிடியும் போரான் பாருங்கள் அதோ (அஃ)
ஓ ஓ மோசமேசெய்ய திருத்தண்ட வேடம் பூண்டான்
உங்களோடு எங்களையும் காலில்விழவே செய்தனன். (அ)
ராஜர்களே ரதம்ஏரிவாருங்கள் உங்கள்
ராஜவீர தீரங்களைக் கூறுங்கள்
ராக்ஷசர்போல் கதைவாளும் வேலுடனே சூலம்எய்வீர்
ராவணன் சீதையை சிறைகொடுபோகும் வாருய்போரான் (ரா)
சுபத்திரை ரதம்வோட்டக்காணுது பின்னும்
சுத்தவீரன் போவதைப்போல் தோணுது
விபரீதமாக சண்டைதொடுத்திட வேணுமிப்போ
விதுவென்ன ஆச்சரியம் கிருஷ்ணன் சொம்மாஇருக்குரான் (சு)

பலராமர் விருத்தம்.

அல்லடா தம்பி கிருஷ்ணு அனைவர்போர்க்கோலம்கொண்டோம்
வல்லபம் பேசிவந்தோன் வார்த்தை யொன்ராடக் காணும்
எல்லோரும் திக்பிரம்மிக்க ஏனோ நீ தியங்கிப் பின்னும்
வில்லம்பும் பாரில் வைத்து விழிப்பது ஏனோ சொல்வாய்.

வசனம்—தம்பி கோபாலகிருஷ்ணு அர்ச்சுனனோடு யுத்தம்செய்ய வேண்டுமெனச் சொன்னவன் தானே நீ இப்போது பேசாமல் இருக்கும் காரணம்யாது தெரிவிப்பாய்.

கிருஷ்ணர் தருவு, ராகம் காம்போதி, ரூபகதாளம்.

அங்கம் துடிக்குதண்ணு அர்ச்சுனனைக் கொல்லலாகாதா
என்னாலே ஆகிலும்
தங்கைசுபத்திரை மாங்கல்யம் நிற்குமா
தரணியில் இப்பழி ஏற்கு மா
எந்தன் சக்கரம் விட்டால் இப்போதே கீரிடி சிரம்
எகிரி விழாதாபுவியில் இன்னம் கேள்
உந்தனாலே வந்த தீங்குக்கு என்னசெய்வேன்
ஓ ஓ என்சொல்லை முன்னம் கேட்டிரு. (அங்)

ஆகையால் சமர் செய்ய வரவில்லை என்மனம்
ஆயர் குலத்திற்காமோ அண்ணாவே
வேகமாய் எதிர்த்திடில் விளையும்தீங்கு ஞான்சொன்னேன்
விமலன்தாளை பூஜிப்போய் யோஜிப்பீர். (அங்)

கிருஷ்ணர் வசனம்—அர்ச்சுனன் இறந்து விட்டால் தங்கை சுபத்திரை அமங்கிலியாவாள் ஆகையால் யோஜிக்குறேன்.

பலராமர் வசனம்—தம்பி கோபாலகிருஷ்ணா இப்போது தான் உன்னுடைய சூது தெரியவந்தது நீயே சுபத்திரையை அர்ச்சுனனோடு அனுப்பினவன் தாம்பூலம்மாத்தி சென்ற துரியோதனன் வந்தால் என்னசொல்லுகிரது தெரிவிப்பாய்.

கிருஷ்ணர் வசனம்—அண்ணா முன்னமேநான் சன்யாசியை நம்பக்கூடாதென்று தடுத்தேன் நீரே சுபத்திரையை அர்ச்சுனனிடம் விட்டீர் அதினால்தான் இந்தப்பழி நேர்ந்தது இனியென்னசெய்யலாம் இனிநாம் இந்திரபிரஸ்தம் சென்று யாவரும் அரிய அர்ச்சுனனுக்கும் சுபத்திரைக்கும் விவாகம் செய்துவிட்டால் நலம் வாரும்போகலாம்.

பொது வசனம்—இவ்விதம் ஸ்ரீகண்ணன் பலராமர் முதல் யாவரும் இந்திரபிரஸ்தம் சென்று சுபத்திரைக்கும் அர்ச்சுன மஹாராஜனுக்கும் திருக்கல்யாணத்தை பூர்த்திசெய்தனரென்றரியுங்கள்.

மங்களம் தரு, இங்கிலீஷ் நோட், தாளம் ரூபக சாப்பு.

ஜோதிவடி அன்னால் அங்காள ஈஸ்வரி
பாரதிக்கு மங்களம்
சுபத்திரை அர்ச்சனர் கோபால கிருஷ்ணற்கும்
சுருதி யோற்கு மங்களம்
காதலாய் படித்தோர் கேட்டோர் நடித்தோர்பார்
கவிஞ்சருக்கு மங்களம்.
காஞ்சி யுனைட்டெட் பிரஸ் மென்மேலாய்
செழிக்க வேணும் ஆதிமங்களம்.

முற்றிற்று.